## ஆபத்தான அடிப்படைவாதம்!

சுயமுன்னேற்றப் பேச்சுகளின் பின்னணி என்ன? இவர்களின் நோக்கம் என்ன? எனப் பத்திரிகையாளர் ம.சுசித்ரா தனது முகநூலில் பதிவிட்டுள்ளார். அந்தப் பதிவிலிருந்து… “இன்றைய மாணவர்கள் நாளைய இந்தியா என்பது யாருக்குத் தெரிகிறதோ இல்லையோ கார்ப்பரேட் ஆசாமிகளுக்கும் அடிப்படைவாத வகையறாக்களுக்கும் நன்றாகவே தெரியும்.

உலகமயமாக்கல் வந்ததிலிருந்து ஆளுமை வளர்ச்சி (Personality Development) என்பது தனித்துறையாகவே வளர்ந்துவிட்டது. “உன்னால் முடியும் உன்னால் முடியும்” என்று உசுப்பேத்திவிட்டு, கார்ப்பரேட் உலகிற்கு நம்மைத் தயார்படுத்துவதே, கார்ப்பரேட் பேச்சாளர்களின் பிரதான நோக்கமாகும்.

பணிப் பாதுகாப்பினையும் நிரந்தர வேலைவாய்ப்பினையும் உறுதி செய்யும் அரசுப்பணிச் சூழலைக் காலாவதியாக்கும் கார்ப்பரேட் திட்டத்துக்கு மறுபேச்சின்றி, “ஆமாம் சாமி” போடவைக்க சில உத்திகளை இந்தப் பேச்சாளர்கள் கையாள்வார்கள். “ஒரே நிறுவனத்தில் பல ஆண்டுகள் வேலை செய்தால், உங்களுக்குத் திறமை இல்லை” என்றும், “வளர்ச்சி என்பது நிறுவனத்துக்கு நிறுவனம் தாவுவதே” என்பார்கள். ஒருநாளும் இவர்கள் அம்பேத்கர், பெரியார், காரல் மார்க்ஸ் போன்ற உண்மையான உந்துசக்தியாக விளங்கிய ஆளுமைகளின் பெயர்களை மறந்தும் உச்சரிக்க மாட்டார்கள்.

சக ஊழியரோடு கூட்டாக இணைந்து, “உனது உரிமையைக் கேள்” என்று தப்பித்தவறியும் சொல்ல மாட்டார்கள். தொழிலாளர்கள் ஒன்றுபட்டுவிடுவோமோ என்கிற அச்சத்தில், “உன் அருகில் இருப்பவரை ஒருபோதும் நம்பாதே, இது போட்டிகள் நிறைந்த உலகம்” என்று சாதுரியமாக விதைப்பார்கள்.

இன்னொன்று அடிப்படைவாதம் பேசுபவர்கள். “எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது, எல்லாம் விதி...எதையும் உன்னால் மாற்ற முடியாது” என்று பயமுறுத்துவார்கள். முன்னது வேலைக்கு ஆள் தயார் செய்யும் பாணி என்றால், பின்னது, அறிவியலுக்குப் புறம்பான, பகுத்தறிவுக்கு ஒவ்வாத மூடத்தனங்களைத் திணித்து, நம் சுயமரியாதையை இழக்கச் செய்யும் பாணி என்பதால், இது கூடுதல் ஆபத்தானது.

“சொன்னதை மட்டும் செய், எதிர்த்துக் கேள்வி கேட்காதே!” என்பதுதான் கார்ப்பரேட் மற்றும் அடிப்படைவாதத்தின் தாரக மந்திரம் என்பதால், இந்த இரண்டு ரக சுயமுன்னேற்றப் பேச்சாளர்களும் ஒருவகையில் ஒட்டிப்பிறந்த இரட்டையர்களே” எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





சிட்கோ
எஸ்.அன்வர்தீன்

### அன்புத் தலைவருடன் அருமைப் படம்!

எங்கள் குடும்பம், கழகப் பாரம்பரியம் மிக்கக் குடும்பம். முத்தமிழறிஞர் கலைஞர் என்றால், எங்கள் அனைவருக்கும் அவ்வளவு பிடிக்கும். சிறுவயது முதலே, பொதுக்கூட்டம், ஆர்ப்பாட்டம், திருமண விழா என எண்ணற்ற முறைகள் தலைவர் கலைஞரைப் பார்த்திருந்தாலும், முதல்வர் அலுவலகத்தில் சந்திக்கும் வாய்ப்பு, 1999-ஆம் ஆண்டு கிடைத்தது. அப்போது கார்கில் நிதி திரட்டப்பட்டதால், தலைவரிடம் எனது பங்களிப்பாக ரூ.1,367 கொடுத்தேன். தலைவர் அவர்கள் ‘கொடு, மகிழ்ச்சி’ என்றார். முதல்வரின் புகைப்படப் பிரிவினர் எடுத்தப் படம் இது.

– **சிட்கோ எஸ்.அன்வர்தீன்,**
**தொண்டர் அணி, அண்ணா அறிவாலயம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அறிஞர் என்றால் அண்ணா!

1947-ஆம் ஆண்டு, கலைஞர் எழுதிய ‘தூக்குமேடை’ நாடகம் தஞ்சை கொடிமரத்து மூலை, கிருஷ்ணா லீலா தியேட்டரில் பட்டுக்கோட்டை அழகிரிசாமி தலைமையில், அரங்கேற்றப்பட்டது. இந்த நாடகத்தினை அரங்கேற்ற எம்.ஆர்.ராதா அடித்த துண்டறிக்கையில் ‘அறிஞர்’ கருணாநிதி என எழுதப்பட்டிருந்ததாம், அதைப் பார்த்த கலைஞர், “அறிஞர் என்றால், அது அண்ணாதான். ஆகவே, அதைத் தூக்கி விடுங்கள்” எனக் கூறி இருக்கிறார்.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** **28**

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்!
அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு
குறித்த வரலாற்றைப் பேசும்
எல்லோருக்கும் எல்லாம்!

## தலித் மக்களின் இடஒதுக்கீட்டை ஆதரித்த பகத் சிங்!

விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்து சிறைசென்ற பாரம்பரியம் கொண்ட குடும்பத்தில் பிறந்த மாவீரன் பகத் சிங் இயல்பாகவே அடிமைத்தனத்தை வெறுத்தார். சிறுவனாக இருந்த பகத் சிங்கின் மனதில் பிரிட்டிஷ் அரசின் ஜாலியன்வாலாபாக் படுகொலை சம்பவம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெறுவதற்காக அயராது உழைக்கவேண்டும் என்ற உணர்வை, வளர்த்துக் கொண்டார் பகத் சிங்.

1923-இல் 16-ஆம் வயதில் வீட்டை விட்டு வெளியேறிய பகத் சிங், மார்க்சியத்தைக் கற்றுக்கொண்டார். சமூகத்தில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மார்க்சிய வழியிலான வர்க்கப் போராட்டமே சரியான வழி, என்ற தீர்க்கமான முடிவுக்கு 20-வது வயதில் வந்தார் பகத் சிங்.

தொழிலாளர்களின் உண்மையான பிரச்சினைகள் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுவதில்லை, எனவே, தொழிலாளர்களுக்கு நாடாளுமன்றம் தேவையில்லை என்ற கருத்துடைய பகத் சிங், அதன் காரணமாகவே ‘கேளாத செவிகளைக் கேட்கச் செய்வதற்காக’ அன்றைய பிரிட்டிஷ் இந்திய நாடாளுமன்றத்தில் கலகம் செய்தார். நாடாளுமன்றத்தை வெற்றுக் கட்டடம் என்று விமர்சித்த பகத் சிங் நாடாளுமன்றத்தில் வெவ்வேறு தரப்பார் இடஒதுக்கீடு பெறுவதை ஆதரித்திருப்பாரா?

**‘கேளாத செவிகளைக் கேட்கச் செய்வதற்காக’ அன்றைய பிரிட்டிஷ் இந்திய நாடாளுமன்றத்தில் கலகம் செய்தார்.**



பகத் சிங்

“பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து விடுதலை பெறுவதை நோக்கிப் போராடிக் கொண்டிருக்கும் சூழலில், வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் எவ்வகையிலும் பயனளிக்காமல் இருக்கலாம். இந்து, முஸ்லிம், சீக்கியர்கள் ஆகிய மூன்று தரப்பாரும் கூடுதல் இடஒதுக்கீடு பெறுவதற்காகக் கடுமையாகப் பாடுபடுகிறார்கள். எனவே, தங்கள் மக்கள் தொகையை அதிகரிப்பதற்காகத் தீண்டப்படாத மக்களை தத்தம் மதத்தில் சேர்க்க முனைகின்றனர். இவ்விதத்தில் மூவரும் ஒருவரையொருவர் விஞ்ச முயல்கின்றனர். இதன் விளைவாக ஏற்படும் குழப்பங்கள், தீண்டாமையின் பிடியை வலுவிழக்கச் செய்கின்றன” என்ற பார்வையைக் கொண்டிருந்தார் பகத் சிங்.

குழந்தைத் திருமணங்களைத் தடைசெய்யும் மசோதாகூட மதத்திற்கு எதிரானது என்று கூறி, சட்டமன்றங்களில் கூச்சலும் கூக்குரலும் எழுப்பும் உயர் வகுப்பார், தமக்குச் சமமாக சட்டமன்றங்களில் பங்கெடுக்க, தீண்டப்படாதவர்களை அனுமதிப்பார்களா என்று மிகச்சரியாக உயர் வகுப்பாரின் சாதிய நிலைப்பாட்டைக் கண்டித்தார் பகத் சிங்.

சமூகத்தின் அனைத்து வாய்ப்புகளையும் வளங்களையும் சுரண்டிக் கொழுத்த உயர்சாதியைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குக் கீழே உள்ளவர்களை ஒடுக்கிக்கொண்டே இருக்க, தங்களால் இயன்ற வரை முயற்சிப்பார்கள். எனவே, சட்டமன்றங்கள் மூலம் நிகழும் படிப்படியான, சீர்திருத்தத்தால் எந்தப் பயனும் இல்லை என்று கருதிய, சமூகக் கிளர்ச்சியிலிருந்து புரட்சியைத் தொடங்கி, அரசியல், பொருளாதாரப் புரட்சிக்காகப் போராடுவதே ஒரே வழி என்று தீர்மானகரமான முடிவெடுத்த பகத் சிங் சட்டமன்ற, நாடாளுமன்றங்களில் இடஒதுக்கீடு எனும் கோரிக்கையை ஆதரித்திருப்பாரா?

ஆம். ஆதரித்தார். தீண்டப்படாத மக்களுக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு உரிய இடங்கள் சட்டமன்றங்களில் வழங்கப்படவேண்டும் என்று பகத் சிங் ஆதரித்து எழுதினார். “தீண்டப்படாத மக்கள் ஒன்றுபட்டுப் போராடாத வரையில் தீண்டாமைக் கொடுமையைத் தீர்க்கவியலாது” என்று உறுதியாக நம்பிய பகத் சிங் தீண்டப்படாத மக்கள் தனித்த அடையாளம் கொண்டவர்கள் என்ற அடிப்படையில், ஒன்றிணைந்து இடஒதுக்கீடு கோருவதைச் சரியெனக் கருதினார். சட்ட மன்றங்களில் தீண்டப்படாத மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு பிரதிநிதித்துவத்துவம் தரவேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக எழுதினார் பகத் சிங். அவ்வாறு தீண்டப்படாத மக்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் கிடைத்தால் மட்டுமே, அவர்களுக்குரிய பிரச்சினைகள் நாடாளுமன்றங்களில் பேசப்படும், என்று பகத் சிங் நம்பியதை 100 ஆண்டுகால வரலாறு மெய்ப்பித்திருக்கிறது.


**...குரல் ஒலிக்கும்**

# மாநாடு

**ர.பிரகாசு** **28**

திராவிட இயக்கம் பயன்படுத்தும்
ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு.
அந்த மாநாடுகளின் வரலாற்றை
வாரம் ஒன்றாக வாசிப்போம்...

## “இதய கீதம்” ஒலித்தது!




திராவிட இயக்கத்தின் சமத்துவ அரசியல் கோட்பாட்டுப் பயணம், அவ்வப்போது சீண்டிக்கொண்டிருக்கும் இந்தித் திணிப்பு, மாநில சுயாட்சிக்கான உரிமைமுழக்கம் என, தி.மு.கழகத்தின் திசைவழிக்கு எடுத்துக்காட்டாக கூறப்படுவது, முத்தமிழறிஞர் கலைஞர் வைத்த ஐம்பெரும் முழக்கங்கள்.

இந்த ‘இதய கீதம்’ முதன்முதலில் ஒலித்தது 1970-ஆம் ஆண்டு பிப்ரவரி 22-ஆம் தேதி திருச்சியில் நடைபெற்ற மாவட்டக் கழக மாநாட்டில்தான். பேரறிஞர் அண்ணா மறைவுக்குப் பிறகு நடைபெற்ற முதல் மாநாடு இது. ‘மாவட்ட மாநாடா அல்லது மாநில மாநாடா’ என சந்தேகங்கொள்ளும் அளவுக்கு, பிற்பகலுக்குப் பின்னர், மக்கள் வெள்ளத்தால் திருச்சி திக்குமுக்காடியது. இரவைப் பகலாக்கிய ஒளிவிளக்குகளுடன் இரவு நேரத்தில் பேரணி நடைபெற்றது. பேரணி புறப்படுவதற்கு முன்பாக, அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்தார் கலைஞர். மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த அண்ணாவின் சிலையில், மின்கசிவு ஏற்பட்டிருந்தது தெரியாமல், ஈரப்பதமான மாலையை கலைஞர் அணிவித்தவுடன் மின்சாரம் பாய்ந்தது. நொடிப்பொழுதில் சுதாரித்துக்கொண்டு கீழே சாய்ந்த கலைஞரை அருகில் இருந்தவர்கள் தாங்கிப் பிடித்துக் கொண்டனர். நல்வாய்ப்பாக அனைவரும் உயிர்தப்பினர்.

**“அந்தச் சுடர் இன்றும் அணையாமல், குலையாமல், உறுதி குன்றாமல், உணர்வு குறையாமல் கொழுந்துவிட்டு எரிகிறது... என்றும் எரியும்!”**

பேரணியில் எடுத்துச் செல்லப்பட்ட அண்ணாவின் எண்ணிலடங்கா உருவம் பொறித்த பதாகைகள் மெய்சிலிர்க்கச் செய்தன. கிராமியக் கலைநிகழ்ச்சிகள் சாலையின் இருமருங்கிலும் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கானோருக்கு விருந்து படைத்தன. மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக அன்பில் தர்மலிங்கமும், மாநாட்டுத் தலைவராக சி.பி.சிற்றரசுவும் நியமிக்கப்பட்டிருந்தனர். கழகத்தின் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர். மாநாட்டைத் திறந்து வைத்தார்.

மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட அன்றைய பஞ்சாப் முதலமைச்சர் குர்னாம் சிங், மாநில உரிமைகள் ஏன் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதற்கான அழுத்தமான கருத்துக்களை முன்வைத்தார். அண்ணா மறைந்து, ஓராண்டாகிவிட்ட நிலையிலும், அந்தப் பேரிடியின் தாக்கத்தில் இருந்து கலைஞரும், கழகமும் மீளவில்லை என்பது, கலைஞரின் பேச்சில் வெளிப்பட்டது. “தாயை இழந்த நேரத்திலே, தந்தையை இழந்த நேரத்திலே எனக்கு ஏற்படாத கவலையை நான் கல்லறைக்குச் செல்கிற வகையில் எனக்கு ஏற்படுத்திச் சென்றுவிட்டார் என்னுடைய அண்ணன்” என கண்கள் குளமாக, உடல் நடுங்க, உள்ளம் குமுற கலைஞர் ஆற்றிய முன்னுரை, மாநாட்டுக் கூட்டத்தில் ‘கண்ணீர் பெருவெள்ளமாய்’ பெருக்கெடுத்தது.

அந்த உருக்கத்தோடே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களை வெளியிட்டார் கலைஞர்.

**1. அண்ணா வழியில் அயராது உழைப்போம். 2. ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம். 3. இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம். 4. வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம். 5. மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி.**


என்று முழங்கி, ஒவ்வொன்றுக்கும் ஆழமான விளக்கத்தையும் அளித்தார். தி.மு.கழகம் உருவாக்கித் தந்த **‘மாநில சுயாட்சி கொள்கைக்கான தீப ஒளி’** திருச்சி மாநாட்டில் சுடர் விட்டு பிரகாசிக்கத் தொடங்கியது. அந்தச் சுடர் இன்றும் அணையாமல், குலையாமல், உறுதி குன்றாமல், உணர்வு குறையாமல் கொழுந்துவிட்டு எரிகிறது... என்றும் எரியும்.

**...கூட்டம் திரளும்**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**597**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.